மெட்ரோ ரயில் விரிவாக்க திட்டத்துக்கு

# கூடுதலாக 10 ரயில்கள் வாங்க ஒப்பந்தம்

சென்னை

சென்னையில் முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்ட விரிவாக்கத்துக்கு கூடுதலாக 10 ரயில்களை வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னையில் முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்துக்கு அல்ஸ்டாம் நிறுவனங்களிடம் இருந்து 42 மெட்ரோ ரயில்களை வாங்க கடந்த 2013-ம் ஆண்டில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இவற்றில் 9 ரயில்கள் பிரேசிலில் உள்ள அந்நிறுவனத்தின் தொழிற்சாலையில் இருந்து அனுப்பப்பட்டன. எஞ்சிய 33 ரயில்கள், ஆந்திர மாநிலம் ஸ்ரீ சிட்டியில் உள்ள அந்நிறுவனத்தின் தொழிற்சாலையில் இருந்து 2014-ம் ஆண்டு முதல் தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகின்றன.

நிறைவாக 42-வது ரயில் ஸ்ரீ சிட்டியில் இருந்து நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கான விழாவில் பங்கேற்ற மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குநர் பன்சால் அதனை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

## 2020-ம் ஆண்டு முதல்

இந்நிலையில் வண்ணாரப்பேட்டை - விம்கோநகர் இடையே நடந்து வரும் முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்ட விரிவாக்கத்துக்கு 10 ரயில்களை வாங்க அந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த 10 ரயில்களையும் 2020-ம் ஆண்டு முதல் பெற திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.